2. தகவல் கோரல்

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை மீண்டும் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி...

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பரிதி இளம்வழுதி பிரச்சினையை முடித்து விடுகிறேன். உங்களுடைய பிரச்சினைக்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். அது ஏற்கனவே நடவடிக்கை....

திரு.ஜி.பழனிசாமி: நீங்கள் எல்லாவற்றிற்கும் அனுமதி மறுத்துவிட்டால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றிற்கும் என்று நீங்கள் சொல்லக்கூடாது. இப்போது திரு. பரிதி இளம்வழுதியை நான் அனுமதிக்கிறேன் அல்லவா ? இப்போது நான் ஒன்றை அனுமதிக்கிறேன். அதனால் எல்லாவற்றையும் என்று சொல்லக்கூடாது. உட்காருங்கள். நான் இப்போது ஒருவரை அனுமதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் நான் எல்லாவற்றையும் அனுமதிக்கவில்லை என்று இப்படிப் பொதுவாகச் சொல்லலாமா; (குறுக்கீடு) இப்போது நான் இன்னும் ஒருவரை அனுமதிக்கிறேன். அப்போதே நீங்கள் இந்தமாதிரிச் செய்தால் எப்படி? உட்காருங்கள்.

3. சிறப்பு கவன ஈர்ப்பு

தென்மண்டல மின்னிருப்பிலிருந்து அதிக மின்சாரத்தை ஆந்திர மாநிலம் எடுத்ததால் சென்னை நகரிலும் வேறு சில பகுதிகளிலும் மின்தடை ஏற்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை நகரத்திலேயும் வேறு சில பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக அடிக்கடி ஏற்படும் மின் தடங்கல் பற்றிய பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. பரிதி இளம்வழுதி என்னிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறார். அவருக்கு அனுமதி வழங்கியிருக்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அதுபற்றிக் கொடுத்திருக்கிறேன். அவருக்கு மட்டும் அனுமதி அளித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி ஏற்கனவே கொடுத்தது. இவர் இப்போது கொடுத்தது, கடந்த ஒன்றிரண்டு நாட்களில் நடந்தது பற்றி. திரு. தாமரைக்கனியும் கொடுத்திருக்கிறீர்கள், திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களாக சென்னை, கடலூர், திருச்சி, வேலூர் போன்ற பகுதிகளிலே அதுவும் குறிப்பாக இரவு 8 மணிக்குப் பிறகு மின் வெட்டு ஏற்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் வருகை தந்தபோது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து மேசையைத் தட்டி ஒலி எழுப்பினார்கள்.)

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மேசையைத் தட்டி முடிக்கட்டும். அதற்குப் பிறகு பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இளம்வழுதி, அவர்களுக்கு இருக்கிற மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. (தொடர்ந்து மேசையைத் தட்டும் ஒலி) பொல்லாங்கு மனிதர்கள் மத்தியில் தங்கள் தலைவியினுடைய புகழை அவ்வப்போது இந்த வகையிலே அவர்கள் தெரிவிப்பது அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை. (தொடர்ந்து மேசையைத் தட்டும் ஒலி)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களாக சென்னை, கடலூர், வேலூர், திருச்சி போன்ற பகுதிகளிலே அதுவும் குறிப்பாக இரவு 8½ மணிக்கு மேல் மின்சார வெட்டு ஏற்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். இப்போது மாணவர்களுக்கு தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே இரவு நேரத்திலே இப்படி கரண்ட் பெயிலியரானால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படும். அது மட்டுமல்ல, சென்னையிலே மின்சார ரெயில் போக்குவரத்திற்கும் தடை ஏற்படுகிறது. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து மாணவர்களுக்கு தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற காரணத்தால், விரைந்து நடவடிக்கை எடுத்து மேலும் இதுபோல் ஏற்படாமல் இருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி திரு. தாமரைக்கனி மற்றும் திரு. சிங்காரம் ஆகியோர் கொடுத்திருக்கிற அறிவிப்புகளையும் சேர்த்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழனிசாமி, இளம்வழுதி கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டாமா? உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு தமிழகத்தில் சில இடங்களில் மின் தடை ஏற்பட்டு ஒரு அசௌகரியமான சூழ்நிலை ஏற்பட்டது என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதுசம்பந்தமாக நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சில விளக்கங்களைத் தந்திருக்கிறேன். அதோடு இப்போது இருக்கின்ற பிரச்சினையையும் இந்த மன்றத்திலே தெரிவிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, தென்மண்டல மின் கூட்டமைப்பு என்பது ஆந்திரம், கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகிய நான்கு தென்னக மாநிலங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுகின்ற ஒரு கட்டமைப்பு. ஒவ்வொரு மாநிலமும் அது தன் சொந்த மின் உற்பத்தியுடன் மத்திய மின்சார நிலையங்களான இராமகுண்டம், நெய்வேலி, கல்பாக்கம் முதலிய உற்பத்தி நிலையங்களிலிருந்து குறிப்பிட்ட பங்கீட்டு மின்சாரத்தை எடுத்துக் கொள்கிறது. ஒருங்கிணைந்த கட்டமைப்பு இயக்கத்தில் எல்லா மாநிலங்களிலும் மத்திய மின்சார நிலையங்களிலிருந்து தங்களது பங்கீட்டைப் பெற்றுக்கொள்வதுடன் மின் அலைவு எண் 50-ஆக, அதாவது பிரிக்குவன்சி 50-ஆக இருக்க ஆவன செய்யவேண்டும். அப்படி இருந்தால்தான் எல்லா மின் நிலையங்களும் பொதுவாக, சிறப்பாக இயங்க முடியும் என்ற நிலை இருக்கிறது. மாநிலங்கள் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட மின் உற்பத்தி செய்யாவிடில் மின் அலைவு, அதாவது பிரிக்குவன்சி இறக்கமும், மின் அலைவு இறக்கம், அதாவது பிரிக்குவன்சி குறைகின்ற நிலை ஏற்படுகின்றது. அப்படி ஏற்படுகின்றபொழுது பொதுவான கட்டமைப்பிலிருந்து தங்களது பங்கீட்டைவிட அதிகமாக எடுக்கக்கூடிய சூழ்நிலை எழுகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான், ஆந்திர மாநிலம் அவர்களுடைய உற்பத்தி குறைகின்ற காரணத்தினாலே ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு மேலே மின்வெட்டு அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினாலே, அந்த உற்பத்தி குறைகின்றபொழுது நம்முடைய

தென்மாநில கட்டமைப்பிலிருந்து அதிகமான மின்சாரத்தை அவர்கள் எடுத்துக் கொள்கின்ற ஒரு அசாதாரணமான சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதுசம்பந்தமாக ஆந்திர மாநிலம் மின் அலைவு எண்ணைக் குறைத்துக் கொண்டு மத்திய மின்சார நிலையங்களிலிருந்து தங்களின் பங்கீட்டைவிட அதிகமாக எடுத்துக்கொள்வதால் மற்ற மாநிலங்களின் பங்கீட்டையும் அவர்களே கவர்ந்து கொள்கின்ற நிலை ஏற்படுகிறது.

நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, ஆந்திர மாநிலத்தில் 40 சதவீதம் மின்வெட்டு இருந்தபோதிலும் அவர்களின் உபயோகம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதால் ஒரு நாளைக்கு தன் பங்கீட்டு அளவைவிட ஆந்திர மாநிலம் 5 அல்லது 6 மில்லியன் யூனிட் மின்சாரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கிறது. அதாவது கிட்டத்தட்ட இது 250 மெகா வாட் மின்சார உற்பத்திப் பிரிவில் ஒரு நாளைய உற்பத்தி அளவாகும். ஏறத்தாழ 250 மெகா வாட் மின்சாரத்தை அவர்கள் மொத்தத்திலே அதிகமாக எடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். குறைந்த மின் அலைவு என்பது 48. அதாவது 48 பிரிக்குவன்சி இருக்க வேண்டும். மின் கட்டமைப்பு இயங்கும் காரணத்தால்தான் தென் மண்டல கட்டமைப்பில் உள்ள மின் நிலையங்களில் ஒரு இயந்திரப்பிரிவு செயலிழக்கும் போது மின் அலைவு எண் மேலும் குறைந்து இந்த பிரிக்குவன்சி அடிக்கடி மேலும் குறைகின்றபொழுது அந்தக் கட்டமைப்பே பாதிக்கப்படுகின்றபொழுது எல்லா மின் இயந்திரங்களும் செயல் இழக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது.

முற்பகல் 11.15

1-4-1995 அன்று இரவு 10-25 மணியளவில் ஆந்திர மாநிலம் தன் பங்கீட்டு அளவைவிட அதிகமாக எடுத்ததினால் அலைவு எண் குறைந்து மின்சாரக் கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தப் பாதிப்பினால் தமிழ்நாடு தென் மண்டலக் கட்டமைப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையிலும் நெய்வேலி, கல்பாக்கம் மற்றும் மேட்டூர் அனல் மின்சார நிலையங்களில் இயந்திரங்களுடைய பிரிவு செயலிழந்தது.

இந்த நேரத்தில் மத்திய மின் நிலையங்களில் தமிழகம் தன் பங்கீட்டைவிட 100 மெகாவாட் அளவு குறைவாகப் பெற்றுக் கொண்டிருந்தது. இதனால் சென்னையில் சில பகுதிகளிலும், தமிழ் நாட்டின் பெரும்பகுதிகளிலும் மின் தடை ஏற்பட்டது. மின் உற்பத்தி இயந்திரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இயக்கி வைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 2-4-1995-ஆம் தேதி காலையில் மின்சார நிலை இயல்புக்கு வந்தது. தமிழ்நாடு தென் மண்டல மின் கட்டமைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு i.e. isolated, ஒரு தனி கட்டமைப்பாக இயங்கியது. ஆனால், 2-4-1995 காலை

11 மணி அளவில் தமிழ்நாட்டின் சம்மதம் இல்லாமல் Power Grid Corporation of India Limited கழகத்தால் தமிழ்நாடு மற்றைய மாநிலங்களுடன் இணைக்கப்பட்டது. ஏனென்று சொன்னால் அவர்கள்தான் அதை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டை ஐசொலேட் செய்த நிலையிலும் அவர்கள் சேர்த்து மற்ற மாநிலங்களோடு இணைத்து இயக்கினார்கள். தமிழகம் தனியாக இயங்கியபொழுது அலைவு எண் 49 என்ற அளவில் இருந்தது. நாம் ஐசொலேட்டாக இருக்கின்றபொழுது அந்த 48-க்கு மேலே இருந்தது அந்த ப்ரிக்குவன்ஸி. ஆனால், தமிழகம் தென் மண்டலக் கட்டமைப்பின் பவர் கிரிட் கழகத்தில் இணைக்கப்பட்டபின் அலைவு எண் 48 ஆகக் குறைந்துவிட்டது. பவர் கிரிட் கார்ப்பரேஷன் - அவர்கள் இணைத்த காரணத்தாலே நம்முடைய ப்ரிக்குவன்ஸி குறைந்து விட்டது. மற்ற கட்டமைப்பில் இணைத்தது குறித்து, தமிழகம் பவர் கிரிட் கழகத்தில் எதிர்ப்பு தெரிவித்தது. நாங்கள் இது சம்பந்தமாக அவர்களிடத்திலே எதிர்ப்பு தெரிவித்தோம். நீங்கள் இவ்வாறு செய்யக் கூடாது. எங்களுக்கு மின் உற்பத்தி அதிகமாக இருந்தாலும் கூட, இப்படி அடுத்த மாநிலங்கள் ஓவர் டிராயல் செய்கின்ற காரணத்தினாலே எங்களுடைய மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு எங்களுக்கு மின் வெட்டு, மின் தடை ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே இதுபோன்று செய்யக் கூடாது என்று எங்களுடைய எதிர்ப்புகளை நாங்கள் அவர்களுக்குத் தெரிவித்தோம். மேலும், ஆந்திரம் தன் பங்கீட்டைவிட அதிக அளவு எடுப்பதைத் தடுக்க ஏற்பாடு செய்யும்படி பவர் கிரிட் கழகத்திடம் நாங்கள் முறையிட்டோம். இந்தமாதிரி செய்கிறார்கள் ஆந்திராவிலே, அவர்களிடத்திலே நீங்கள் அறிவுறுத்த வேண்டுமென்று சொன்னோம். ஆந்திராவிலே இருக்கின்ற சேர்மன், எலக்ட்ரிசிட்டி போர்டு அவர்களிடம் நானே நேரடியாகத் தொடர்பு கொண்டு, இது சம்பந்தமாக நம்முடைய கண்டனத்தைத் நான் தெரிவித்திருக்கிறேன். ஆனால் பவர் கிரிட் கழகம் அதற்கு எந்தவித பதில் நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. தனது பங்கீட்டைவிட அதிகமாக மின் கட்டமைப்பிலிருந்து மின்சாரத்தை எடுத்துக்கொள்ளும் ஆந்திராவின் இத்தகைய செயலினால் 2-4-1995 ஆம் தேதியன்றும் இரவு 8.43 மணியளவில் மின்சாரக் கட்டமைப்பில் மேலும் ஒரு பாதிப்பு ஏற்பட்டது. இதனால் மீண்டும் நெய்வேலி, மேட்டூர் அனல் மின் நிலையங்களில் உற்பத்திப் பிரிவில் செயலிழந்து தமிழ்நாட்டில் 1500 மெகாவாட் மின் உற்பத்தி குறைந்தது. இந்த இழப்பால் தமிழ் நாட்டில் பெரும்பகுதியில் சென்னையிலும், சில பகுதிகளிலும் மின்சாரத் தடை ஏற்பட்டது. மின்சார உற்பத்தி பிரிவுகள் 3 மணி நேரத்திற்கு இயக்கி வைக்கப்பட்டு முக்கிய பயனீட்டாளர்களுக்கும், நகரங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது.

மத்திய மின்சார அமைச்சகம், அதாவது Ministry of Power, Government of India மத்திய மின்சார நிறுவனம் Central Electricity Authority மற்றும் தென் மண்டல மின்வாரியம் Southern Regional Electricity Board இவைகளிடம் அடிக்கடி ஏற்படும் மின் பாதிப்பைத் தடுக்க வேண்டுமென்பதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு, கேரளம் ஒரு பிரிவாகவும், ஆந்திரம், கர்நாடகம் ஒரு பிரிவாகவும் இயங்கக் கேட்டுக் கொண்டுள்ளது. நாமும் தமிழ்நாடும், கேரளமும் ஒரு பிரிவாகவும், இந்த 4 மாநிலங்களையும் ஒன்றாக இல்லாமல், கேரளமும், தமிழ்நாடும் ஒரு பிரிவாகவும், ஆந்திரத்தையும் கர்நாடகத்தையும் ஒரு பிரிவாகவும் இயக்க வேண்டுமென்று—நாம் இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம். ஆனால் மேற்சொன்ன நிறுவனங்கள் தமிழகத்தின் வேண்டுகோளைப்பற்றி கவனம் செலுத்தவில்லை. அவர்கள் அதை ஏற்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்தமாக 4 மாநிலங்களும் ஒன்றாகத்தான்-சதர்ன் கிரிட் ஆக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் ஆந்திரா தன் பங்கைவிட அதிகமாக எடுக்கும் செயலையும் தடுக்க நடவடிக்கை அவர்கள் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று நாம் பலமுறை சொல்லியும் அவர்கள் இன்னும்-அவர்களிடத்திலே சொன்னார்கள். ஆனால் அதை அவர்கள் முழுமையாக கடைப்பிடிக்கவில்லை. ஆந்திராவிலே அதிகமாகத் தேவை இருக்கிறது. அவர்களுடைய மின்வெட்டு இப்பொழுது கிட்டத்தட்ட 60 சதவீதத்திற்கும் மேலே போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அங்கே நிலைமை மோசமாக இருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பிரச்சினை அடிக்கடி ஏற்படுகிறது.

தமிழகத்தைப் போலவே கர்நாடக மாநிலமும், ஆந்திரா தன் பங்கைவிட அதிகமாக எடுக்கும் செயலைப்பற்றிக் குறை கூறியுள்ளது. கர்நாடகம் இது சம்பந்தமாக எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள்.

நெய்வேலி, கல்பாக்கம் நிறுவனங்கள் அலைவு எண் இறக்கத்தில் மின் கட்டமைப்பு இயங்குவதால் தங்களது மின்சார இயந்திரப் பிரிவுகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டுள்ளன. அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நெய்வேலியிலும், கல்பாக்கத்திலும் இருக்கின்ற மின்சார உற்பத்தி நிலையத்தில் இருக்கின்ற தலைமைப் பொறியாளர்களெல்லாம் இது சம்பந்தமாக அவர்களிடத்திலே-டெல்லியிலே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இவர்களும் தனி கட்டமைப்பாக தமிழகத்துடன் இருப்பதையே விரும்புகிறார்கள். இங்கேயிருக்கின்ற நம்முடைய கல்பாக்கம் அணு மின் நிலையமும்,

நெய்வேலி அனல் மின் நிலையமும் தமிழகத்திலே ஐசொலேட்டாக இருப்பதைத்தான் அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் விரும்புகிறார்கள்.

அடுத்தடுத்து இரண்டு நாட்கள் ஏற்பட்ட மின்சாரப் பாதிப்பு தமிழக மின்சாரப் பயனீட்டாளர்களை மிகவும் பாதித்துள்ளது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. தமிழகத்தின் மின் உற்பத்தியில் எந்த வித குறைவும் இல்லாதபொழுது மற்ற மாநிலங்களின் உற்பத்திக் குறைவினால் தமிழகம் பாதிக்கப்பட்டுள்ளது. 4-4-1995 தேதிக்குள் தமிழகத்தில் மின்சார நிலைமை முழுமையாகச் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழக முறையீட்டால் 4-4-1995-இல் தலைவர், பவர் கிரிட் கார்ப்பரேஷன், ஆந்திராவுடன் பேச்சுவார்த்தை நடத்த ஹைதராபாத்துக்குச் சென்றிருக்கிறார். பவர் கிரிட் கார்ப்பரேஷனுடைய தலைவரை நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் ஹைதராபாத்துக்குச் சென்றிருக்கிறார்.

முற்பகல் 11.20

ஆந்திராவிடம் பேச்சு நடத்தி, இதுபோன்ற பிரச்சினை இனிமேல் எழக்கூடாது என்பதற்காக அவர் அங்கே சென்றிருக்கிறார். ஆந்திர மாநிலம் தனது பங்கீட்டு அளவைவிட அதிகமாக மின்சாரத்தை எடுக்கும் செயலையும், மின்சார பாதிப்பு அடிக்கடி ஏற்படும் செயலையும், மத்திய மின்சார அமைச்சகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இது குறித்து பேசி முடிவு செய்ய, தென் மாநில மின்வாரியத் தலைவர்களின் கூட்டம்,—Chairmen's Meeting—சிறப்புச் செயலாளர், மின்சாரம், மத்திய அரசாங்கம் அவர்களால் 5-4-1995 அன்று டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த தென் மாநில எலக்ட்ரிசிடி போர்டினுடைய தலைவர்களினுடைய மீட்டிங்கில், செகரட்டரிகள் எல்லோரையும் அழைத்து, அங்கே 5-ஆம் தேதியன்று அந்தக் கூட்டம் நடைபெற இருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் அதிலே கலந்து கொள்வார், நம்முடைய மாநிலத்தின் சார்பிலே. ஆந்திரா தன் பங்கைவிட அதிகமாக எடுத்துக் கொள்வதைத் தடுக்கவும், அடிக்கடி ஏற்படும் மின்பாதிப்பைத் தடுக்கவும், செயல்விதிமுறைகள் இந்தக் கூட்டத்தில் வகுக்கப்படும் என நம்பப்படுகிறது. ஆகவே, இந்தக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்க வேண்டுமென்று நாங்கள் டெல்லியிடத்திலே சொல்லியிருக்கிறோம். இனிமேல் இந்தப் பிரச்சினை ஏற்பட்டால், தமிழ்நாட்டைத் தனியாக 'ஐசோலேட்' செய்து, எங்களுடைய 'கிரிட்'-ஐ தனியாக, 'கிரிட்'-இலிருந்து பிரித்து விடுவோம் என்று நாங்கள் அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறோம். இதுசம்பந்தமாக பேசுவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவர், டெல்லிக்குச் செல்கிறார். நாளைக்கு

அங்கே இறுதியான முடிவு எடுக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பின்னால், இந்தப் பிரச்சினை எழாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில், அரசு இதுபோன்ற முழுமையான நடவடிக்கை, தெளிவான நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதிலே மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே, மின்உற்பத்தியும், மின் பகிர்மானமும், ஒரே அளவிலே இருக்கிறது. இரண்டுக்கும் இடையிலே இடைவெளி கிடையாது. ஆகவே, தமிழகத்திலே மின்வெட்டு எதுவும் கிடையாது. ஆந்திராவிலே ஏற்படுகிற பிரச்சினை காரணமாக, சதர்ன் கிரிட்டிலே ஏற்படுகிற பிரச்சினை காரணமாகத் தான், இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இதனை சரிசெய்வதற்கு, முறையான நடவடிக்கைகள் அரசின் சார்பிலே எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு எதுவும் இல்லை. (குறுக்கீடு) ஏற்கெனவே, என்னிடம் ஒரு பிரச்சினையை எழுப்பத்தான் அனுமதி கேட்டீர்கள். என்னுடைய அனுமதி பெறாமல் எதுவும் கேட்கக் கூடாது. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலம் அனுமதி இல்லாமல், இப்படி எடுப்பதனால் நமக்கு இப்போது பாதிப்பு ஏற்படுகிறது. கல்பாக்கம் அணு மின்நிலையம் பாதிக்கப்படுகிறது. நெய்வேலி அனல் மின்நிலையம் பாதிக்கப்படுகிறது. இதனால் ஏற்படுகிற இழப்புகளுக்கு, ஆந்திர மாநிலத்திலிருந்து நஷ்ட ஈடு பெறுவதற்கு அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே திரும்ப திரும்பக் கேள்வி கேட்கக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோன்று அவர்கள் 'ஓவர்-ட்ராயல்' செய்த மின்சார யூனிட்டுகளுக்குக் கட்டணம் வசூலித்திருக்கிறோம். இன்னும் அவர்கள் கொஞ்சம் பாக்கி செலுத்த வேண்டியிருக்கிறது. அவர்கள் எத்தனை யூனிட் மின்சாரம் எடுக்கிறார்களோ, அந்தத் தொகை அவர்களிடத்திலே வசூலிக்கப்படுகிறது. ஆனால், இப்படி வசூலித்தாலும் கூட, இதுபோன்ற பிரச்சினைகள் நமக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், ஒரு நிரந்தர தீர்வு காணவேணடும் என்பதற்காகத்தான், இதுபோன்ற நடவடிக்கைகளை நாம்

எடுத்திருக்கிறோம். ஏனென்று சொன்னால், இது ஏற்கெனவே இருக்கிற அமைப்பு. புதிதாக அல்ல. 4 மாநிலங்களில் ஏற்பட்ட பிரச்சினை. இதிலே உடனடியாக ஒரு முடிவு எடுத்துவிட முடியாது. இதிலே கலந்து பேசி, இதற்கு ஒரு தீர்வு கண்டால்தான், ஒரு நிரந்தரமான தீர்வு ஏற்பட முடியும். அந்த அடிப்படையிலேதான், இதுபோன்ற அடுக்கடுக்கான நடவடிக்கைகளை இந்த அரசு, குறுகிய காலத்திற்குள்ளே எடுத்து, டெல்லியிலே மின்சார வாரியத்தினுடைய தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு செய்து, ஹைதராபாத்திற்கு எலக்ட்ரிசிடி போர்டு சேர்மனையும் அனுப்பி, இதுபோன்ற ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறோம். ஆகவே இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் எழாது. நம்முடைய சார்பிலே, நாம் தெளிவாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திரும்பத் திரும்பக் கேட்கக்கூடாது. (குறுக்கீடு) 'ஸ்பெஷல் மென்ஷ'னுக்கு அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு விளக்கம் கேட்க, நான் அனுமதிப்பதற்கில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். திரும்பத் திரும்ப விளக்கம் கேட்பதற்கு அனுமதி இல்லை. அப்படி அனுமதிப்பதானால், நான் விதி 55-லேயே அதை எடுத்திருப்பேன். விதி 55-ல் எடுத்திருந்தால், நீங்கள் திரும்ப 2 கேள்விகள் கேட்பதற்கு உங்களுக்கு அனுமதி கிடைத்திருக்கும். உட்காருங்கள்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை மீண்டும் எழுப்புதல் தொடர்ச்சி

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் கொடுத்த பிரச்சினை, ஏற்கெனவே அரசாங்கம், அதிலே நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொல்லி, நான் அதற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை நீங்கள் எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) அது உங்களுடைய பிரச்சினையின் முக்கியத்துவம் என்று கருதுவீர்களேயானால், விதி 56-ல் நான் அனுமதி மறுத்து விட்டேன்; நாளைய தினம் 'ஸ்பெஷல் மென்ஷன்'-ஆக வேண்டுமானால் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை

நீங்கள் இங்கே பேசக்கூடாது. அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து பேசலாம். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை, இங்கே வந்து திரும்பத் திரும்பக் கேட்கக்கூடாது. நாளைய தினம், அந்தப் பிரச்சினையை, சாயல்குடி பிரச்சினையை, 'ஸ்பெஷல் மென்ஷ'னாக எடுத்துக் கொள்கிறேன். உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை இங்கே பேச முடியாது. விதியைப் படியுங்கள். விதி 58-ஐப் படித்துப் பார்த்துவிட்டு, பிறகு சொல்லுங்கள். உட்காருங்கள். அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நான் அனுமதி மறுத்ததை இங்கே பேசக் கூடாது. (குறுக்கீடு) அதை காவல்துறை மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை, இது 'ஸ்பெஷல் மென்ஷன்'-ஆக எடுத்துக் கொள்ளப்படும். உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு.எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை.

அரவக்குறிச்சி தொகுதியில் சில கிராமங்களில் குடிநீர், செய்தித்தாள் காகித ஆலையின் கழிவு நீரினால் பாதிக்கப்படுவது குறித்து.

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி. கே.மரியம் உல் ஆசியா.

* *திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், அரவக்குறிச்சித் தொகுதி, புன்னம் கிராமம், சி. ரங்கபாளையம், வெள்ளியம்பாளையம் ஆகிய கிராமங்களில் அருகில் உள்ள தமிழ்நாடு செய்தித் தாள் காகித ஆலையின் கழிவு நீரினால் குடிநீர் பாதிக்கும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.